**ORIGINAL ARTICLE**

# இலங்கை காழி நீதிமன்றங்களின் தீர்ப்பளிக்கும் முறைமை: ஒரு பகுப்பாய்வு

**[ILANGKAI KAAZI NEETHIMANDANGKALIN TEERPALIKKUM MURAIMAI: ORU PAKUPPAAIVU]**

# THE JUDGEMENTS OF QUAZI COURTS IN SRI LANKA: AN ANALYSIS

**M.I.M. Jazeel[1]; M.B. Fowzul[2] & A.R.F. Rakeeza [3]**

[1]Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.
Email: jazeelmi@seu.ac.lk
[2]Department of Islamic Studies, Eastern University of Sri Lanka
Email: fowzulb@esn.ac.lk
[1]Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
Email: rakeeza.rasool@gmail.com

DOI: https://doi.org/10.33306/mjssh/50

**ஆய்வுச் சாரம்**

நீதிப் பரிபாலனத்தில் தீர்ப்பளித்தல் என்பது மிகப் பிரதான பணியாகும். தீர்ப்பு நீதமானதாக, பக்கசார்பற்றதாக, வெளிப்படையானதாக இருக்க வேண்டும் என்பதில் இஸ்லாத்தின் கரிசனை வலுவானதாகும்; 'காழி'கள் மேற்கொள்ளும் தீர்ப்பளித்தல் செயற்பாட்டைப் (Practice of Judgment) பகுப்பாய்யும் இவ்வாய்வு, 'காழி' நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்படும் நடைமுறைகள், தீர்ப்புக்களை அமுலாக்கம் செய்வதில் உள்ள நடைமுறைப் பிரச்சினைகள், பெண்களுக்குப் பாதகமான நடைமுறைகள், மேன்முறையீட்டு நடைமுறைகள் என்பனவற்றை ஷரீஆவின் பிரமாணங்களுடன் ஒப்பிட்டு ஆராய்வதைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டுள்ளது. வினாக்கொத்து, களப்பணி மூலம் பெறப்பட்ட முதன்மை நிலைத் தரவுகளின் பகுப்பாய்வினை இவ்வாய்வு பிரதான அடிப்படையாகக் கொண்டது. இஸ்லாம் விதந்துரைக்கும் தீர்ப்பளித்தல் பற்றிய ஒழுங்கமைப்பு, நெறிமுறைகளை காழிகள் கைக்கொள்வதில் இடைவெளிகள் உள்ளன. இந்நிலை தீர்ப்புகள் பற்றிய அதிர்ப்தி மற்றும் மேல்முறையீடுக்கு வழிகோலியும் விடுகின்றன. இவ்வாய்வு காழி நீதிமன்றம் தொடர்பான மறுசீரமைப்பிற்கும், காழி நீதவான்கள் போன்ற நீதிப் பரிபாலனத்துடன் தொடர்பானவர்களுக்கும்; சிறந்த வழிகாட்டியாக அமையவல்லது.

**கருச்சொற்கள்**: காழி நீதிமன்றம், குடும்ப வழக்குகள், விவாகரத்துக்கள், தீர்ப்பளிக்கும் முறைமை, தீர்ப்புக்கள்

**Abstract**

The judgment is key practice in dispensing justice and its administration. Concern of Islam to ensure neutral and visible judgment is central. This study which aims at analyzing judgments made by quazis, employs largely primary data collected through survey administered among quazis and clients. The analysis and discussion on the whole process of quazi court, judgment, its implementation, and effects along with the comparing them with legal (sharia) formularies indicates the gaps between the quazi court practices and shariah norms and principles. This situation reflected in affecting perception of clients about the judgments and in increase of appeal process for review of the decision. The study may pinpoint policy makers and quazis the areas require the change and reformation.

**Keywords:** Quazi Court; Family Cases; Divorces; Judging System, Judgments

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 11th October 2019, revised 25th October 2019, accepted 9th December 2019

**அறிமுகம்**

மனித வரலாற்றில் நீதி பெறுமானமிக்கதோர் உயர்ந்த பண்பாகும் (Jazeel & Fowzul, 2014)[1]. நீதிப் பரிபாலனத்தில் தீர்ப்பளித்தல் என்பது மிகப் பிரதான பணியாகும். தீர்ப்பு நீதமானதாக, பக்கசார்பற்றதாக, வெளிப்படையானதாக இருக்க வேண்டும் என்பதில் இஸ்லாத்தின் கரிசனை வலுவானதாகும்;. இஸ்லாத்தின் மூல ஆவணங்கள் தீர்ப்பளித்தல் ஒழுங்கு பற்றி பிரஸ்தாபித்துள்ளன. நபி (ஸல்) அவர்களது காலத்தில் நீதிப்பரிபாலனம் தனிநபர்கள், குழுக்களிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்தல் என அமைந்திருந்தது. நபி (ஸல்) அவர்கள் தீர்ப்பளித்தலிலும்; நீதி செலுத்துவதிலும் தன்னிகரற்று விளங்கினார்கள். நீதிமன்றில் வழக்கோடு தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். வாதி, பிரதிவாதி, சாட்சிகளிடம் வாக்கு மூலம் பெறப்பட்டது. ஆரம்பத்தில் வாதி சான்றினை (பைய்யினா) சமர்ப்பிப்பதையும், சான்றுகள் இல்லாத சந்தர்ப்பத்தில் பிரதிவாதி சத்தியப்பிரமாணம் செய்வதையும் தீர்வுக்கான அடிப்படையாக நபி (ஸல்) அவர்கள் கொண்டார்கள். விசாரணையின் பின்னர் நபி (ஸல்) அவர்கள் வழங்கிய தீரப்பு உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. நபி (ஸல்) அவர்களின் இத்தகைய செயற்பாடுகள் தீர்ப்பளிப்பதற்கான ஒரு நிறுவப்பட்ட மாதிரியாக அமைந்தது எனலாம். எனவே, இஸ்லாத்தின் தீர்ப்பளிக்கும் ஒழுங்கு, அதன் சட்ட விதிமுறைகள் பற்றி அறிவது முஸ்லிமின், குறிப்பாக 'காழி'யின் ஆன்மீக வாழ்வை நெறிப்படுத்தவல்லது (Jazeel & Fowzul, 2019)[2].

**தீர்ப்புக்கான மூலாதாரங்கள்**

நபி (ஸல்) அவர்கள் இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் விஸ்தரிப்பின் பின்னர், தூர இடங்களில் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிப்பதற்கு நபித்தோழர்களை நியமித்து வழக்குகளைக் கையாளுவதற்கான அறிவுறுத்தல்களை வழங்கினார்கள். நீதித் தீர்மானத்தைப் பெறுவதற்கான வழிமுறை பற்றிய நபி (ஸல்) அவர்களின் வினாவுக்கு முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்களது பதில் இங்கு குறிப்பிடத்தக்கது. இஸ்லாமிய முதன்மை மூல ஆவணமான அல்குர்ஆன், அடுத்த மூல ஆவணமான அஸ்ஸுன்னா (நபிவழி), இறுதியானதாக 'இஜ்திஹாத்' என முஆத் (ரழி) அவர்கள் விளக்கியமை ஒரு 'காழி' தெய்வீக வழிகாட்டுதல் தெளிவாகக் குறிப்பிடப்படாத நிலையில் தனது சிந்தனாத் திறனைப் பயன்படுத்துவது அனுமதிக்கப்பட்டுள்ளதற்கான சான்றாகும். 'கிலாபா ராஷிதா' காலப்பிரிவில் தீர்ப்பளித்தல் செயற்பாட்டிக்கான வழிமுறையை, விதிகளை கலீபா உமர் (ரழி) அவர்கள் அபூ மூஸா அல் அஷ்அரி (ரழி) அவர்களுக்கு அனுப்பிய வரலாற்றுப்புகழ்மிக்க கடிதம் காண்பிக்கின்றது (இப்னுல் காஸ், 2007)[3].

இஸ்லாமிய வரலாற்றின் முன்னோடிக் காலப் பகுதியில் தீர்ப்பளிக்கும் ஒழுங்கு பற்றிய விபரம் அக்கால இலக்கியங்கள், 'காழி'களின் சுயவிபரக் கோவை, 'ஆதாபுல் காழி' பற்றிய எழுத்துக்கள், வரலாற்று மூலங்கள் என்பவற்றில் காணக் கிடைக்கிறது. 'வகீஉ'வின் 'அஹ்பாருல் குழாத்' (Biographies of Judges) எனும் நூல் இவற்றுல் காலத்தால் முந்தியதாகும். தீர்ப்பளிக்கும் ஒழுங்கைத் தொகுத்துக் கூறும் 'அல்-அஹ்காமுல் குப்ரா' எனும் நூல் பாட நூலாகப் பயன்பட்டது (MK. Masud et al, 2006)[4]. இமாம் கஸ்ஸாலி அவர்கள் 'காழி'யின் தீர்ப்பு முறை ஓர் அறிஞனின் கல்விசார் செயற்பாட்டை ஒத்திருப்பதாகக் காண்கின்றார். நடத்தையின் ஒழுக்கவியல் தன்மை தொடர்பான வினாவுக்கு ஒரு கல்வியாளன் அறிவார்ந்த செயற்பாட்டின் மூலம் தீர்வினைக் கண்டறிவது போல, ஒரு 'காழி' வழக்குத் தொடர்பில் தீர்ப்பளிக்க முனைகிறார் என உவமிக்கிறார் (MK. Masud et al, 2006)[4]. இதற்கமைய ஒரு சட்ட நிபுணரைப் போலவே 'காழி'யும் தனது தீர்ப்புக்கான முதன்மை மூல ஆவணங்களாக அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவையே கொண்டுள்ளார். மூல ஆவணங்களில் ஷரீஆ வெளிப்படையாகக் குறிப்பிடாத விடயம் தொடர்பில் 'காழி' தனது சிந்தனாற்றலைப் பயன்படுத்தி தீர்ப்பளிக்க முயன்றுள்ளார் (C.E. Besworth ef el, 1991)[5]. 'காழி' தனது சிந்தனாற்றலை தீர்வுக்கான அடிப்படையாகக் கொள்வதில் அறிஞர்களிடத்தில் ஏகோபித்த உடன்பாடு காணப்படுகிறது. சாட்சிகள் தொடர்பில் குறை, நிறைகளைக் கண்டறிவதில் 'காழி'யின் அறிவுத் திறன் ஏற்புடையது. சாட்சியத்தில் குறையிருப்பதாக 'காழி' கருதுவாராயின், அது பற்றி மேலதிக விசாரணை மேற்கொள்வது அவசியமாகும். சாட்சியங்களுடைய நேர்மையை 'காழி' அறிந்திருப்பாராயின் அச்சாட்சியங்களை ஏற்றுக் கொள்வதில் எவ்வித தயக்கமும் அவசியமில்லை (இப்னுல் காஸ், 2007)[3].

ஆயினும், வழக்காளிகளின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் வழக்கொன்றில் 'காழி' தனது சுய அறிவை உபயோகித்தல் தொடர்பில் இஸ்லாமிய சட்ட நிபுணர்களிடத்தில் ஒருமித்த கருத்து இல்லை. இச்சந்தர்ப்பத்தில் விசாரணையிலிருந்து பெறும் சான்றுகளையும்

ஒப்பீடுகளையும் தவிர வேறு எதனையும் அடிப்படையாகக் கொள்ள முடியாது என இமாம் மாலிக், இமாம் அஹ்மத் ஆகியோர் குறிப்பிடுகின்றனர். சுய சிந்தனையை அடிப்படையாகக் கொள்வதைக் 'காழி'கள் தமது சுய இலாபங்களுக்கான வாய்ப்பாகக் கொள்ளலாம் என்ற அச்சம் இஸ்லாமிய அறிஞர்களிடையே நிலவுகிறது என்பதையே, 'தற்கால 'காழி'களின் குழப்ப நிலையைக் கருத்திற் கொண்டு 'காழி' தனது சுய அறிவைக் கொண்டு தீர்ப்பளிப்பதை அனுமதிக்க முடியாது' என ஹனபி சிந்தனைப் பிரிவினர் வாதிக்கின்றனர். இதற்கமைய இமாம் அஷ்-ஷாபிஈ அவர்கள் 'தீய 'காழி'கள் இல்லை என்றால், அவர்கள் தமது அறிவைக் கொண்டு தீர்ப்பு வழங்குவது சிறப்புக்குரியது என்பேன்' எனக் குறிப்பிடுகிறார். ஸஹாபாக்கள், தாபிஈன்கள் காலத்திற்குப் பின்னர் மோசடிக்காரர்கள் அதிகமாகக் காணப்படுவதால், ''காழி' சுய அறிவை தீர்வுக்கான அடிப்படையாகக் கொள்வதை முற்றாக தடை செய்வதே சிறந்தது' என இமாம் இப்னு ஹஜர் அல் அஸ்கலானி அவர்கள் குறிப்பிடுகிறார்கள் (அஷ்ஷர்ஈனி, 1958)[6].

**முறைமை**

தீர்ப்பளிக்கும் போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய மனோநிலை மற்றும் கள நிலைகள், வாதியும், பிரதிவாதியும் அணுகப்பட வேண்டிய விதங்கள், காழி நீதிமன்றங்களில் தீர்ப்பு வழங்கும் முறைமை, வழங்கப்படும் தீர்ப்புக்கள் போன்றன பற்றி பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் இவ்வாய்வின் நோக்கம் பண்புசார், அளவுசார் முறைமைகள் இரண்டும் தேவைக்கேற்ப கலந்து பிரயோகிக்கப்படுவதன் ஊடாக அடைப்பட்டது. இப்பரிசீலனைக்கு வழக்காளிகள் மற்றும் 'காழி'களிடம் பெறப்பட்ட தரவுகள் முதன்மையானவையாக அமைகின்றன. மேலும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடனான நேர்காணல், கள அவதான குறிப்புக்கள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட தகவல்களும் இங்கு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் என்பன வழிமுறைகள் மூலம் அனுபவச்சான்றுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. தற்போது இலங்கையில் அறுபத்தைந்து 'காழி' நீதிமன்ற வலயங்கள் உள்ளன. ஒரு நீதிவலயத்துக்கு ஒரு 'காழி' என்ற அடிப்படையில் அறுபத்தைந்து 'காழி'கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும், சில 'காழி'களின் பதவிக் காலம் முடிவடைந்தமை, அல்லது சில 'காழி'களின் பதவித் துறப்பு போன்ற காரணிகளினால் தற்போது சுமார் அறுபது'காழி'கள் கடமையாற்றுகின்றனர். 'காழி'களில் சுமார் எழுபது வீதமானோர் இவ்வாய்வை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களுக்குப் பதிலளித்துள்ளனர். அறுபத்தைந்து 'காழி' நீதிமன்றங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குறித்த மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்களின் சனத்தொகை வீதம், வழக்குகளின் எண்ணிக்கைச் சதவீதம் போன்றனவற்றைக் கருத்திற் கொண்டதான வீதத்திற்கு ஏற்ப நானூறு வழக்காளிகள் எளிய எழுமாற்று மாதிரி மூலம் தெரிவு செய்யப்பட்டனர். அவற்றில் மீளப்பெறப்பட்ட வினாக்கொத்துக்களின் எண்ணிக்கை 294 (73.5 வீதம்) ஆகும். வினாக்கொத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள் அளவுசார் அளவீடுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு மென்பொருளான SPSS 16.0 மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 'காழி'களின்

சபையின் செயலாளர், அகில இலங்கை உலமா சபையின் பொதுச்செயலாளர், முன்னாள் 'காழி'கள் நால்வர், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் செயற்பாட்டாளர், நீதிச்சேவை ஆணைக்குழுவின் உத்தியோகத்தர், சட்டத்தரணிகள் போன்றோர்; 'காழி' யின் தீப்பளிக்கும் முறைமை, நடைமுறையின் அனுபவங்களை அறிந்து கொள்வதற்காகவும் நேர்காணப்பட்டனர்.

மேலும், ஆய்வுக் கோட்பாட்டைக் கட்டமைப்பதற்கு நூலக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல் குர்ஆன், அஸ்ஸுன்னா, பிரதான இமாம்களின் கருத்துக்கள், இஸ்லாமிய வரலாற்று அனுபவம், நவீன இஸ்லாமிய சிந்தனையாளர்களின் கருத்துக்கள் என்பன இஸ்லாமிய கண்ணோக்கிற்கான அடிப்படைகளாக அமைகின்றன. இக்கோட்பாட்டு ரீதியான அமைப்புத் திட்டம் இலங்கையில்; 'காழி'களின் தீர்ப்பளிக்கும் செயற்பாடுகளை ஒப்பிட்டுப் பரிசீலிப்பதற்கான அளவுகோள்களாகும். இலங்கையின் 'காழி' நீதிமன்ற முறைமை 'காழி'கள் பற்றிய இலக்கியங்கள் மிக அரிதாகவே உள்ளன (Jazeel & Fowzul, 2018)[7]. விசேடமாக, இவ்விடயங்களை இஸ்லாமிய ஷரீஆவுடன் ஒப்பிட்டு நோக்குவது புதியதோர் கண்ணோட்டமாகும். எனினும், இஸ்லாமிய ஷரீஆவின் நீதிமன்ற முறைமை நீதிபதிகள் பற்றிய கோட்பாடுகளைப் பிரத்தியேகமாகக் கூறும் இலக்கியங்கள், ஸஊதி அரேபியா, எகிப்து, மலேசியா போன்ற நாடுகளின் நீதிமன்ற முறைமை பற்றிய இஸ்லாமிய ஷரீஆவுடனான ஒப்பீட்டாய்வுகள், இலங்கையின் 'காழி' நீதிமன்ற முறைமை, 'காழி'கள் தொடர்பான பதிப்பிக்கப்பட்ட, பதிப்பிக்கப்படாத முதல்நிலை, இரண்டாம் நிலை இலக்கியங்கள், அறிக்கைகள், சஞ்சிகைக் கட்டுரைகள் போன்றன இவ்வாய்வின் குறிக்கோள்களை அடைவதற்காகக் பயன்பாட்டிற்கும் மீளாய்வுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன.

## கண்டறிதல்களும் கலந்துரையாடலும்

### நிபுணர்களுடன் கலந்தாலோசனை:

தீர்ப்பளிப்பதற்கு முன்னர் 'காழி' தனது விசாரணையிலிருந்து புரிந்து கொண்ட யதார்த்தங்களையும், சான்றுகளின் வலுவையும், வலுவின்மையையும் பற்றி அறிஞர்களுடனும், துறைசார் நிபுணர்களுடனும் கலந்துரையாட வேண்டும். நேர்வழிபெற்ற நான்கு ஆட்சியாளர்களும் நபித்தோழர்களும் இந்நடைமுறையைப் பின்பற்றினர். மேற்கூறிய நடைமுறைக்கேற்ப 'காழி' அறிஞர்களுடன் கலந்துரையாடும் போது, அவர்கள் 'காழி'யின் புரிதலிலும், நியாயப்படுத்தலிலும் தவறுகள் காணப்படின் சுட்டிக் காட்டுவர். 'காழி'யின் அவதானத்திலிருந்து விடுபட்ட சான்றுகள் இருப்பினும் அதனையும் எடுத்துரைப்பர். அதனாலேயே சிறந்த மார்க்க அறிஞர்களை ஆலோசகர்களாக நியமிக்குமாறு இஸ்லாமிய ஷரீஆ வலியுறுத்துகிறது.

அட்டவணை 1:
*காழிக்கு ஆலோசனை வழங்குபவர்கள்*

| இல | ஆலோசனை வழங்குபவர்கள் | பெருமளவில் | சாதாரணமாக | ஓரளவாக | அறவே இல்லை |
|---|---|---|---|---|---|
| 1 | அரச நீதிபதி | 7.7% | 0.0% | 46.2% | 46.2% |
| 2 | சட்டத்தரணி | 13.3% | 26.7% | 40.0% | 20.0% |
| 3 | ஊர்ப்பிரமுகர்கள் | 26.3% | 31.6% | 26.3% | 15.8% |
| 4 | முன்னாள் 'காழி' | 36.1% | 33.3% | 23.8% | 4.8% |
| 5 | ஜூரி | 70.6% | 26.5% | 2.9% | 0.0% |

ஷரீஆவின் இந்த நெறிமுறையைக் 'காழி' நீதிமன்றங்களில் நடைமுறைப்படுத்தப்படுவது பற்றி அட்டவணை 1 காண்பிக்கின்றது. அதன் படி, 'காழி'களில் மிகப் பெரும்பான்மையானோர் (70.6%) தமது ஜூரிகளுடனும் 36.1 வீதமானோர் முன்னாள் 'காழி'யுடனும் சுமார் நான்கில் ஒரு பகுதியினர் (26.3%) ஊர்ப் பிரமுகர்களுடனும் பெருமளவில் தீர்ப்பளித்தல் பற்றி கலந்துரையாடுவதாக அறிய முடிகிறது. ஆயினும், சட்டத்துறை சார்ந்த அரச நீதிபதி, சட்டத்தரணி போன்றோருடன் கலந்துரையாடுவது மிகக் குறைவாக இருப்பது உகந்ததல்ல என்றே கருதலாம்.

**தீர்ப்புக்கான காரணங்களைக் கூறல்:**

'காழி' தனது தீர்ப்பை வழங்கும் போது, வழக்காளிகள் இருவரின் முன்னிலையிலும் தான் அத்தீர்ப்பை வழங்க முடிவெடுத்தமைக்கான நியாயத்தைத் தெளிவுபடுத்த வேண்டும். 'காழி' அதை எவ்வாறு தெளிவுபடுத்த வேண்டுமென இமாம் ஷாபிஈ போன்ற இஸ்லாமிய சட்டவியல் நிபுணர்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர். அதற்கிணங்க, 'காழி'கள் தமது தீர்ப்புக்கான நியாயங்களை வெளியிடுவதாக மிகப் பெரும்பான்மையான வழக்காளிகள் (81%) தெரிவித்துள்ளனர். அவர்களில் 51.6 வீதமானவர்கள் 'காழி' தமது தீர்ப்பை வாய்மூலம் தெரிவித்ததாகவும், 47.1 வீதமானவர்கள் எழுத்து மூலம் அறிவித்ததாகவும் கூறியுள்ளனர். இவ்வாறு தீர்ப்புக்கான நியாயங்களை வெளியிடுதல் வழக்காளிகளைத் திருப்திப்படுத்தக் கூடியதாகவும், 'காழி'யின் மீதான நம்பிக்கையை அதிகரிப்பதாகவும் அமையும். ஆயினும், தமது 'காழி'கள் இவ்வாறு நியாயங்கள் எதனையும் தெளிவுபடுத்தவில்லையென 19 வீதமானவர்கள் கூறியுள்ளனர். இவ்வாறு நியாயங்களை வெளியிடாமை அத்தீர்ப்பின் மீதான சந்தேகத்தையும், 'காழி'யின் மீதான கண்டனத்தையும் ஏற்படுத்தவல்லது எனலாம்.

**தீர்ப்பளித்தல்:**

'காழி' தன்னிடம் முன்வைக்கப்படும் வழக்குகளைத் தீர விசாரித்துச் சாட்சிகளை உறுதிப்படுத்திய பின்னர் தீர்ப்பை வழங்குவது வழக்கமாகும். இவ்வாறு தீர்ப்பு வழங்கும் போது 'காழி' உடல், உள அமைதியைப் பெற்றிருக்க வேண்டும். 'காழி' கோபமாக இருக்கும் நிலையில் தீர்ப்பு வழங்க வேண்டாம் (புகாரி, ஹதீஸ்: 6739, ப.2616) என்று நபி (ஸல்) அவர்கள் தடை விதித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனை உமர் (ரழி) அவர்களும் தனது பிரசித்தமான கடிதத்தில் 'கோபம், கவலை, சளிப்பு, கடும் வெறுப்பு, அருவருப்பு போன்ற நிலைகளின் போது தீர்ப்பளிப்பதைத் தவிர்ந்து கொள்ளுங்கள்' என கட்டளையிட்டிருந்தார்கள் (இப்னு குதாமா, 1984)[8].

இவ்விடயம் பற்றி முன்னாள் பிரதம நீதியரசர் சி.ஜி.வீரமந்த்ரி (2009)[9] பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'நீதிமுறையோடு தொடர்புடைய சில தொழிற்பாடுகளைப் பற்றிய நவீன சிந்தனைகள் இருபதாம் நூற்றாண்டு சட்டவியல் இலக்கியத்தில் ஆய்வுக்குள்ளாகியுள்ளன. இவற்றுள் சிலவற்றைப் பற்றிய நவீன சிந்தனைகள் இருபதாம் நூற்றாண்டுகளுக்கு முன்னரே இஸ்லாமிய சட்டவியலில் இடம் பெற்றிருக்கின்றன என்பது கவனத்திற்குரியதாகும். உடல் நலக்குறைவு, அஜீரணம் போன்ற உணர முடியாத, வெளிப்படுத்த முடியாத காரணிகள் கூட சில வேளைகளில் 'காழி' (நீதிபதி)களின் மனப்போக்கினை மாற்றி அவர்களது பாரபட்சமற்ற தன்மையில் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என சில அமெரிக்க சட்ட அறிஞர்கள் கருதுகின்றனர். கோபத்திலோ, பசியிலோ அல்லது உள்ளத்தை அலைக்கழிக்கும் உடல் நலக் குறைவு இருக்கும் நிலையிலோ ஒரு 'காழி' தீர்ப்பு வழங்கக் கூடாது என பதிநான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே இஸ்லாம் கூறியுள்ளது.' கவனயீனத்தால் சிலவேளை தீர்ப்புக்கள் தவறானதாக, பக்கச்சார்பானதாக மாறும் நிலையேற்படலாம் என்பதற்காகவே இஸ்லாம் இவ்வாறான மனோநிலையில் 'காழி' தீர்ப்பு வழங்குவதை தடைசெய்கிறது எனலாம்.

'காழி'களினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களை வழக்காளிகளில் நான்கில் மூன்று பகுதியினர் (77.6%) உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்துள்ளனர். நான்கில் ஒரு பகுதியினர் (22.4%) அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் தரவுகள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு 'காழி'யின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாதவர்கள் தாம் எதிர்பார்த்த, தமக்குச் சாதகமான தீர்ப்பு கிடைக்காமைக்குக் காரணம் 'காழி'யின் அவசரமான தீர்ப்பு (33.3%), 'காழி'யின் அறியாமை (13.3%) என்றும், எதிராளியின் பிடிவாதம் (34.4%) என்றும் தெரிவித்தனர். அதேவேளை, பெண் வழக்காளிகள் 'காழி' ஆணாக இருந்தமையினால் பெண்ணின் நியாயத்தை அவரால் அறிய முடியவில்லை (12.2%) என்றும், மிகச்சிலர் (2.7%) ஆண்களுக்குச் சார்பாக 'காழி' நடந்து கொண்டதாகவும் கூறியுள்ளனர். வழக்காளிகளின் இக்கருத்துக்களில் எதிராளியின் பிடிவாதம் என்பதை விடுத்து ஏனைய ஐம்பது வீதத்துக்கும் அதிகமானவை (66.4%) ஏதோவொரு வகையில் 'காழி'யைப் பற்றிய விமர்சனமாகவே உள்ளதை அவதானிக்கலாம். அதேவேளை, 20.7 வீதமானவர்கள் 'காழி' அவசரமாகவே தீர்ப்பு வழங்கினார் என்றும், 22.4 வீதமானவர்கள் தீர்ப்புக்காகப் பல மாதங்கள் காத்திருந்ததாகவும் கூறியுள்ளமை தீர்ப்பு நியாயமாக இருந்த

போதிலும், அதனை வழங்குவதற்காகக் 'காழி'கள் எடுத்துக் கொள்ளும் கால அளவு பற்றி வழக்காளிகள் திருப்தியடையவில்லை என்பதைக் காண்பிக்கின்றன.

'காழி'களின் தீர்ப்புக்கள் தாமதமடைவதால் ஏராளமான வழக்குகள் தீர்க்கப்படாமல் இருப்பதைத் தரவுகள் குறிப்பிடுகின்றன. கடந்த ஐந்து வருடங்களில் 'காழி' நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை அவதானிக்கும் போது சுமார் ஐம்பது வீதமான வழக்குகள் வருடாந்தம் தீர்க்கப்படாதிருப்பதைப் பின்வரும் அட்டவணை: 2 காண்பிக்கின்றது. அட்டவணை:2 இன் படி இலங்கையிலுள்ள அனைத்து 'காழி' நீதிமன்றங்களிலும் கடந்த ஐந்து வருடங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 2012ம் ஆண்டில் மாத்திரமே 65 வீதமான வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன. ஏனைய வருடங்களில் 50க்கும் 55க்கும் இடைப்பட்ட வீதத்திலேயே வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன. இதனால் சுமார் ஐம்பது வீதமான வழக்குகள் வருடாந்தம் தீர்க்கப்படாதிருப்பதை அவதானிக்கலாம்.

அட்டவணை 2:
*காழிநீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை*

| ஆண்டு | முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை | | தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள்; | | தீர்க்கப்படாத வழக்குகள் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| 2009 | 10036 | 100% | 5151 | 51.33% | 4885 | 48.67% |
| 2010 | 11239 | 100% | 6249 | 55.60% | 4990 | 44.40% |
| 2011 | 10554 | 100% | 5786 | 54.82% | 4768 | 45.18% |
| 2012 | 13226 | 100% | 8651 | 65.41% | 4575 | 34.59% |
| 2013 (Jan-Aug) | 8771 | 100% | 4439 | 50.61% | 4332 | 49.39% |

மூலம்: நீதியமைச்சின் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகள்

**தீர்ப்பை வெளியிடல்:**

முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் 47ம் பிரிவின் 8ம், 9ம் உட்பிரிவுகள் விசாரணைகளையும், தீர்ப்புக்களையும் 'காழி' எழுதுவதோடு அதில் வழக்காளிகளின் கையொப்பத்தைப் பெற வேண்டும் என்றும், அவ்விருவரில் எவராவது கட்டணத்தைச் செலுத்தினால் அவ்வழக்கின் நடவடிக்கைகளைக் கொண்ட அத்தாட்சிப்படுத்திய பிரதியொன்றை வழங்குதல் வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது. 'காழி' தனது தீர்ப்பை வெளியிடும் முறை பற்றி வழக்காளிகளில் 35.4 வீதமானவர்கள் எழுத்து மூலம் அறிவித்ததாகவும், எழுத்து மூலம் அறிவித்து விட்டு நீதிமன்ற விளம்பரப் பலகையில் ஒட்டியதாக 4 வீதமானவர்களும், வாய்

மூலம் அறிவித்து விட்டு ஜுமுஆ மஸ்ஜிதின் விளம்பரப் பலகையில் ஒட்டியதாக 3 வீதமானவர்களும், தீர்ப்பை முறையாக அறிவிக்கவில்லையென 3.7 வீதமானவர்களும் தெரிவித்துள்ளனர். இந்நடைமுறைகள் தீர்ப்பை வெளியிடுவதற்கு 'காழி' நீதிமன்றத்தில் சீரானதோர் ஒழுங்கமைப்புப் பின்பற்றப்படவில்லை என்பதையே காண்பிக்கின்றது.

**மேன்முறையீடுகள்:**

தீர்ப்பு வழங்கலில் நீதிபதி தவறிலிருந்து பாதுகாக்கப்பட்டவரல்ல. தெளிவான மூல ஆவணங்களைப் புரிந்து கொள்வதிலும் சுய சிந்தனையைப் பயன்படுத்துவதிலும் தவறுகள் ஏற்படலாம். இந்நிலையில் தனது தீர்ப்பை நீதிபதி மீள்பரிசீலனை செய்வது அவசியமாகும். தனது தவறுக்காகப் பாவமன்னிப்பை வேண்டுதலும் வேண்டும். ஸுறா அந்நிஸாவின் வாசகங்களின் விளக்கவுரையில் 'திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவர் குற்றவாளி அல்ல' என தீர்ப்பு வழங்கப்பட்ட போது, '(முஹம்மதே!) அல்லாஹ் உமக்குக் காட்டித் தரும் அடிப்படையில் மக்கள் மத்தியில் நீர் தீர்ப்பு வழங்குவதற்காக உண்மையை உள்ளடக்கிய இவ்வேதத்தை உமக்கு அருளினோம். மோசடி செய்வோருக்கு வாதிடுபவராக நீர் ஆகிவிடாதீர். அல்லாஹ்விடம் நீர் பாவமன்னிப்புத் தேடுவீராக.' என தீர்ப்பு மீளாய்வு செய்யப்படுவதன் அவசியத்தை அல் குர்ஆனிய வாசகங்கள் (அல் குர்ஆன் 4:105,106) வலியுறுத்துகின்றன. இதன் தொடர்பில், இப்னு கல்தூன் நீதிபதிகளுக்குப் பின்வருமாறு அறிவுறுத்துகிறார்.

'நீதிபதி நீதிமன்ற அமர்விலிருந்து எழுந்து சென்ற பின் சுய மதிப்பீட்டுச் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும். அன்றைய நாள் அவர் வழங்கிய தீர்ப்புக்களை மீளாய்வு செய்து தவறுகள் ஏற்பட்டுள்ளதா என ஆய்தல் வேண்டும். அவ்வாறு தவறுகள் ஏற்பட்டிருப்பின், முடியுமான அளவு அவற்றைத் திருத்தியமைக்க முனைய வேண்டும்.' (அஹ்மத், 1996)[10]. தீர்ப்புக்களை மீளாய்வு செய்தலை ஒரு முக்கிய செயற்பாடாக உமர் (ரழி) அவர்களுடைய கடிதம் காண்பிக்கின்றது. நீதிபதி தனது தவறான தீர்ப்பை வாபஸ் பெற்று பகிரங்கமாக அறிவித்தல் வேண்டும். கௌரவம், பதவியிழப்புப் போன்ற பயம் அந்நிலையிலிருந்து அவரைத் தடுத்துவிடக் கூடாது. தவறான, அநீதியான தீர்ப்புக்கள் அவரை நரகில் ஆழ்த்திவிடும் என்பது இஸ்லாத்தின் தெளிவான போதனையாகும். பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு தீர்ப்பு, அதை வழங்கிய நீதிபதியினால் மாற்றப்பட முடியாதென்றும், அத்தீர்ப்பினை தெளிவான சான்றுகளோடு மீளாய்வு செய்த வேறொரு நீதிபதியினாலேயே மறுதீர்ப்பு வழங்கப்பட வேண்டும் எனக் கருதுவோரும் உண்டு. ஆயினும், இக்கருத்து அல்குர்ஆனுக்கும் நபிவழிக்கும் இஜ்மாவுக்கும் ஏற்புடையதல்ல எனக் குறிப்பிடப்படுகிறது (MK. Masud et al, 2006)[4].

இஸ்லாமிய வரலாற்றில் நீதிபதிக்கும், அவரது அநீதமான, தவறான தீர்ப்புக்கும், துர்நடத்தைக்கும் எதிராக மேன்முறையீடு செய்யும் உரிமை மக்களின் அடிப்படை உரிமையாக கணிக்கப்பட்டது. இந்நிலையில் அவர்கள் ஆட்சியாளரிடமே தம் முறையீடுகளைச் சமர்ப்பித்தனர். இதற்கமைய சில வழக்குகள் அண்மையிலுள்ள வேறு நீதிமன்றத்திற்கு

மாற்றப்பட்டுப் புதிய நியாய விசாரணை மேற்கொள்ளப்பட்டதும் உண்டு. இஸ்லாமிய வரலாற்றின் பிற்காலப்பகுதியில் நீதிபதியின் செயற்பாட்டின் மீது மேற்பார்வை மேற்கொள்வதற்கான ஏற்பாடும் காணப்பட்டது. உஸ்மானிய ஆட்சியில் நீதிமன்றத்தில் இடம்பெற்ற துஷ்பிரயோகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பிரபல்யமானவை.

இலங்கையில் 'காழி' அவர்களால் வழங்கப்படும் இறுதித் தீர்ப்பில் அதிருப்தியடையும் வழக்காளிகள் 'காழி'கள் சபைக்கு மேன்முறையீடு செய்ய முடியுமென முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் 60வது பிரிவு அறிவுறுத்துகிறது. இதன் காரணமாகவே 'காழி'யொருவர் விவாகரத்து உத்தரவொன்றைப் பிறப்பித்ததன் பின்னர் ஒரு மாத காலத்திற்கு விவாகரத்தைப் பதிவு செய்யாமல் வைத்திருப்பார். மேன்முறையீடு சம்பந்தமாக அவருக்கு எவ்வித அறிவிப்பும் கிடைக்காத போது, அம்மாதத்தின் இறுதியில் விவாகரத்தைப் பதிவு செய்வார் (அமீன், 2001)[11].

'காழி'கள் சபைக்குச் செய்யப்படும் மேன்முறையீட்டுக்கான கால எல்லை எதுவும் வரையறுக்கப்படவில்லை. எனினும், ஒரு 'காழி'யின் 'வொலி' சம்பந்தமான தீர்ப்புக்கெதிராக எழுத்து மூலமான மேன்முறையீடொன்று பத்து நாட்களுக்குள் முன்வைக்கப்படல் வேண்டும். ஏனைய தீர்ப்புக்களுக்கெதிரான மேன்முறையீடுகள் அத்தீர்ப்பு வழங்கப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் முன்வைக்கப்பட வேண்டும் என்ற நியதியும் காணப்படுகின்றது. இருப்பினும், சுகவீனமடைதல், விபத்துக்கள் ஏற்படல், துரதிஷ்ட, தவிர்க்க முடியாத காரணிகள் போன்றன மேன்முறையீடு செய்யத் தாமதமடைந்ததற்கான நியாயங்களாக ஏற்றுக் கொள்ளப்படும்.

அது மாத்திரமல்ல, 'காழி'கள் சபையினால் வழங்கப்படும் தீர்ப்புக்களில் அதிருப்தி அடைபவர்கள், அத்தீர்ப்பு வழங்கப்பட்டு முப்பது நாட்களுக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையிடலாம். இந்நீதிமன்றத்தின் தீர்ப்பிலும் அதிருப்தி அடைந்தால், அவர் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யலாம். அதுவே நீதித்துறையின் இறுதியான மேன்முறையீட்டு நீதிமன்றமாகும். முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் 3ம் அட்டவணையின் விதிகள் 'காழி'யின் தீர்ப்பினால் பாதிக்கப்படும் வழக்காளிகள் 'காழி'கள் சபையில் மேன்முறையீடு செய்யும் முறை பற்றிக் குறிப்பிடுகின்றன. வருடாந்தம் சராசரியாக இருநூறுக்கும்; மேற்பட்ட மேன்முறையீடுகள் 'காழி'கள் சபையில் 'காழி'களின் தீர்ப்புக்களுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுவதைப் பின்வரும் அட்டவணை 3 காண்பிக்கிறது.

அட்டவணை 3 'காழி'கள் சபையில் கடந்த ஐந்து வருடங்களில் பதிவு செய்யப்பட்ட மேன்முறையீடுகள் பற்றிக் குறிப்பிடுகிறது. இதன்படி, 2010ம் ஆண்டில் மாத்திரமே சுமார் 66.67 வீதமான மேன்முறையீடுகள் தீர்க்கப்பட்டுள்ளன. ஏனைய வருடங்களில் சராசரியாக மூன்றில் ஒரு பகுதி மேன்முறையீடுகளே தீர்க்கப்பட்டுள்ளன. இத்தரவுகள் 'காழி'களினால் பாதிக்கப்பட்ட வழக்காளிகள் 'காழி' நீதிமன்றங்களின் மேன்முறையீட்டு நீதிமன்றமான 'காழி'கள் சபைக்கு

மேன்முறையீடு செய்தும் கூட, அவற்றைத் தீர்ப்பதில் அச்சபை உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளமையை வெளிப்படுத்துகின்றது. இது 'காழி' நீதிமன்ற முறைமையின் மீது அவநம்பிக்கை ஏற்படுத்துவதாக அமையலாம்.

அட்டவணை 3:

*காழிகள் சபையில் பதிவு செய்யப்பட்ட மேன்முறையீடுகளின் நிலை*

| ஆண்டு | முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை | | தீர்ப்பளிக்கப்பட்ட மேன்முறையீடுகள்; | | தீர்க்கப்படாத மேன்முறையீடுகள் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| 2009 | 295 | 100% | 123 | 41.69% | 172 | 58.31% |
| 2010 | 276 | 100% | 184 | 66.67% | 92 | 33.33% |
| 2011 | 160 | 100% | 48 | 30.00% | 112 | 70.00% |
| 2012 | 206 | 100% | 69 | 33.50% | 137 | 66.50% |
| 2013 (Jan-Aug) | 195 | 100% | 32 | 16.41% | 163 | 83.59% |

மூலம்: நீதியமைச்சின் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகள்

**தீர்ப்பளித்தலில் உள்ள நடைமுறைப் பிரச்சினைகள்**

**மத்ஹப்:**

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் இலங்கையைச் சேர்ந்த அனைத்து முஸ்லிம்களினதும் விவாகம், விவாகரத்து, அவை தொடர்பிலான ஏனைய விடயங்களுக்கும் ஏற்புடைத்தானது. ஓர் இஸ்லாமிய விவாகம் அல்லது விவாகரத்தின் வலிதுடைமையோ அல்லது வேறு விடயங்களோ எந்தப் பிரிவினால் அவர்கள் ஆளப்படுகின்றனரோ, அந்தப் பிரிவின் முஸ்லிம் சட்டத்திலேயே தங்கியுள்ளது என 1951ம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் கூறுகிறது. இச்சட்டத்திற்கு இணங்க இலங்கை முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் ஷாபிஃ பிரிவைச் சேர்ந்தவர்கள் என இலங்கை நீதிமன்றங்கள் கருதுகின்றன. அதேவேளை, ஹனபி மத்ஹபைச் சார்ந்த மேமன் சமூகத்தினருக்கும், ஷீஆ பிரிவைச் சார்ந்த போரா சமூகத்தினருக்கும் அவரவர் சட்ட சிந்தனைப் பிரிவிற்கு ஏற்ப அவர்கள் தமது விவாக, விவாகரத்துத் தொடர்பான விடயங்களை நடைமுறைப்படுத்த அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும், இச்சட்டம் நடைமுறையில் பல இடர்களைக் கொண்டுள்ளது. குறித்த ஒரு முஸ்லிம் எந்தச் சிந்தனைப் பிரிவைச் சேர்ந்தவர் என்பதைத் தீர்மானிப்பதற்கான

அளவுகோல்களை இச்சட்டம் கொண்டிருக்கவில்லை என்பது கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். அதேவேளை, சில விடயங்களில் எந்த சிந்தனைப் பிரிவின் அடிப்படையில் 'காழி'கள் செயற்பட வேண்டும் என்ற தெளிவின்மையும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு மாதத்தில் மூன்று 'தலாக்'குகளையும் கூறுகின்ற நடைமுறை ஹனபி மத்ஹபில் அனுமதிக்கப்பட்ட விடயமாகும். ஆயினும், இந்நடைமுறையைப் பெரும்பாலான ஷாபிஈ சிந்தனைப் பிரிவைச் சேர்ந்த 'காழி'கள் கடைப்பிடிப்பது அவதானிக்கப்பட்டது. குறித்த சிந்தனைப் பிரிவைப் பின்பற்றுவதில் ஏற்பட்டுள்ள இவ்வாறான நடைமுறை முரண்பாடுகள் பற்றி 'ஷாபிஈ மத்ஹபை முழுமையாகப் பின்பற்றுவதில் ஏற்படக் கூடிய அபாயங்களும், இத்தகைய பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் ஆராயப்பட வேண்டியவை' என நீதியரசர் ஸலீம் மர்சூப் குறிப்பிடுகின்றார். (ஸலீம் மர்சூப், 2001)[12].

இஸ்லாமிய சட்டவியல் விவகாரங்களில் சிந்தனைப் பிரிவுகளை முழுமையாகப் பின்பற்றுவதை விட இஸ்லாத்தின் மூலாதாரங்களான அல் குர்ஆன், அஸ்ஸுன்னா ஆகிய இரண்டுக்கும் முன்னுரிமை வழங்குவதே சிறந்ததாகும். பாகிஸ்தான் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பொன்று இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். 'குல்உ' விவாகரத்தின் போது கணவனின் சம்மதம் தேவை என ஷாபிஈ, ஹனபி சிந்தனைப் பிரிவினர் கூறுகின்றனர். மாலிகி சிந்தனைப் பிரிவின் படி அவ்விவாகரத்திற்குக் கணவனின் சம்மதம் தேவையில்லை எனக் கருதப்படுகிறது. 1960களின் பிற்பகுதியில் பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் பாகிஸ்தானில் பெரும்பான்மையான முஸ்லிம்கள் ஹனபி சிந்தனைப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தும் கூட, 'வழக்காளிகள் திருமணத்தின் ஊடான தங்களது கடமைகளையும், பொறுப்புக்களையும் அனுசரித்து வாழும் சாத்தியம் இல்லை' என்பதை நீதிமன்றம் திருப்தியடையும் வகையில் மனைவி நிரூபிக்கும் பட்சத்தில் 'கணவன் திருமண பந்தத்திலிருந்து மனைவியை விடுதலை செய்வதற்கு இணங்காத போதிலும், அம்மனைவிக்கு 'குல்உ' விவாகரத்துப் பெறுவதற்கு உரிமை உண்டு' எனத் தீர்ப்பளித்தது. பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் ஹனபி சட்டத்தையும் மீறி அல்குர்ஆன் அஸ்ஸுன்னாவின் அடிப்படையில் இத்தீர்ப்பை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் (சூளனி கொடிக்கார, 2010)[13].

**பெண்களுக்குப் பாதகமான நடைமுறைகள்**:

'தலாக்' அல்லது 'பஸ்ஹ்' மூலம் விவாகரத்துப் பெற்ற மனைவிக்கு வழங்கப்படும் இழப்பீட்டு நன்கொடை 'மதாஃ' எனப்படும். விவாகரத்துப் பெற்ற மனைவியருக்கு இதனை வழங்குமாறு அல்குர்ஆன் வலியுறுத்திக் கூறுகின்றது. 'இன்னும் அவர்களுக்கு ஏதும் கொடுத்துப் பயனடையச் செய்யுங்கள்; வசதியுள்ளவரின் மீது அவருக்குரிய அளவும், வசதியற்றவர் மீது அவருக்குரிய அளவும் நியாயமான முறையில் வழங்குவது நல்லவர்கள் மீது கடமையாகும்.' (அல்குர்ஆன் 2:236). மேலுள்ள அல்குர்ஆனின் கட்டளைக்கிணங்க இத்தகைய நஷ்டஈட்டை கணவனிடமிருந்து 'தலாக்' கூறப்பட்ட பெண்ணுக்குப் பெற்றுக் கொடுப்பதைப் பல முஸ்லிம் நாடுகள் சட்டமாக்கியுள்ளன. ஊதாரணமாக, மலேசியாவில் நியாயமான காரணங்கள்

எதுவுமின்றி விவாகரத்துச் செய்யப்பட்ட மனைவி, இத்தா தாபரிப்புக்கு மேலதிகமாக, இழப்பீட்டு நன்கொடை கோரி நீதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பது நியாயமானதும், நீதியானதுமாகும் என 1984ஆம் ஆண்டின் இஸ்லாமியக் குடும்பச் சட்டத்தின் 56ம் பிரிவு குறிப்பிடுகின்றது (சூளனி கொடிக்கார, 2010)[13].

இலங்கையின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் 'மதாஃ' பற்றி குறிப்பிடப்படவில்லை. எனவே, கலாநிதி ஸஹாப்தீன் குழு 'மதாஃ' வழங்கக் கூடிய வகையில் சட்டத்தில் சீர்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் எனப் பிரகடனம் செய்துள்ளது. எனினும், முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் இன்னும் 'மதாஃ' வழங்கும் விடயம் சேர்க்கப்படாவிட்டாலும் கூட, அது ஷரீஆவில் மிகவும் வலியுறுத்தப்பட்ட ஒன்று என்பதனால் அதிகமான 'காழி'கள் அதனைப் பெற்றுக் கொடுப்பதில் அதிக ஆர்வம் காட்டுவதாக நேர்காணலின் போது கூறினர். இந்த 'மதாஃ' எனும் நஷ்ட ஈட்டை நியாயமான தொகையில் விவாகரத்துச் செய்யப்படும் பெண்ணுக்குக் குறித்த கணவனிடமிருந்து பெற்றுக் கொடுக்க 'காழி'கள் முன்வரும் போது, விவாகரத்துக்கள் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தலாம் என ஸலீம் மர்ஸூப் (2001)[12] கூறுகின்றார். இவ்வாறு கூடிய தொகையிலான நஷ்டஈட்டை விதிப்பதன் மூலம் விவாகரத்தின் வீதத்தைத் தான் குறைத்து விட்டதாகக் 'காழி' ஒருவரும் தெரிவித்தார். இவ்வாறு விவாகரத்துச் செய்த கணவன் ஒருவர் தனது மனைவிக்கு ரூபாய் பதினைந்து இலட்சத்தை நஷ்டஈடாக வழங்க வேண்டும் என்ற குளியாபிட்டிய நீதிவலயத்தின் முன்னாள் 'காழி'யொருவரின் தீர்ப்புப் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. குறித்த கணவன் 'காழி'கள் சபையில் மேன்முறையீடு செய்த போது, அத்தீர்ப்புச் சரியானதென அச்சபையும் தீர்ப்பளித்தது. எனவே, அக்கணவன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இத்தீர்ப்புப் பற்றி மேன்முறையீடு செய்தார். அம்முறையீட்டை விசாரணை செய்த கௌரவ நீதியரசர் சரத் என்.சில்வா அவர்கள் குறித்த 'காழி'யிடம் விளக்கம் கோரினார். பிரதிவாதியாகத் தோன்றிய 'காழி' வாதியாகிய அக்கணவன் செல்வந்தன் என்பதனால் அல்குர்ஆன் (ஸூரதுல் பகரா:136) வாசகத்திற்கேற்ப தான் தீர்ப்பளித்ததாகவும், அதற்கான அனுமதியை முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் வழங்குவதாகவும் கூறிய போது, மேன்முறையீட்டு நீதிமன்றமும் அத்தீர்ப்புச் சரியானதெனத் தீர்ப்பளித்தது (நேர்காணல்: சித்தீக் மௌலவி - முன்னால் 'காழி', குளியாபிட்டிய நீதி வலயம்)[14].

மேலும், விவாகரத்துச் செய்யப்படும் போது, குறித்த மனைவிக்கு அவளது கணவனிடமிருந்து நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுப்பது பற்றி 'காழி'களிடம் வினவப்பட்ட போது, 92 வீதமானவர்கள் நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுத்ததாகவும், விரல்விட்டு எண்ணக்கூடிய 8 வீதமானவர்கள் மாத்திரமே பெற்றுக் கொடுக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். ஆனால், நடைமுறையில் 'காழி'கள் அவ்வாறு நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுப்பது மிக அரிது என பல வழக்காளிகளின் கருத்துக்கள் மூலமும், பொதுவான அவதானத்தின் மூலமும் அறியக்கூடியதாக உள்ளது.

**முடிவுரை**

'காழி' தனது தீர்ப்பளித்தலின் போது வழக்கின் தன்மையையும், நிகழ்வின் நியாயத்தையும் புரிந்து கொள்வதில் நிபுணர்களுடன் கலந்துரையாடும் நடைமுறையை வழக்கமாகக் கொண்டவர் இல்லை போல் உள்ளது. ஆயினும், தனது ஜுரிகளின் ஆலோசனையைப் பெரிதும் பெறுகிறார். தீர்ப்பளித்தல் செயற்பாட்டின் போது 'காழி' தனது தீர்ப்புக்கான நியாயங்களை வெளிப்படுத்துகிறார். 'காழி'யின் தீர்ப்புப் பற்றிய விமர்சனங்கள் எழாமலில்லை. சுமார் நான்கிலொரு பகுதிக்குச் சற்றுக் குறைந்தோர் 'காழி'யின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுள் கணிசமானோர் 'காழி'கள் சபையின் மறுபரிசீலனைக்கு மேன்முறையீடு செய்துள்ளனர். மேலும், இலங்கையின் 'காழி' நீதிமன்றச் செயற்பாட்டில் சட்ட உதவியைப் பெறுவதற்கு வக்கீலை நியமனம் செய்வதற்கான நடைமுறை பேணப்படவில்லை.

**துணைநூற்பட்டியல்:**


1. Jazeel, M. I. M., & Fowzul, M. B. (2014b). Qualification and behavior of the judge: An Islamic perspective. Paper presented at the 3rd International Conference of Eastern University on *"Sustainable Development through Innovations"* Eastern University of Sri Lanka, Vantharumoolai, Sri Lanka.
2. Jazeel, M. I. M., & Fowzul, M. B. (2019). Behaviors of the Quazi in Sri Lanka: An empirical Study from Islamic perspective. *Sri Lankan Journal of Arabic and Islamic Studies*, *2*(1), 15-30.
3. Ibnul Khaz. (2007). *Atap Al-Kali (அதப் அல்-காழி)*. Bayreuth: Darul Qutub Al-Ilmiyyah.
4. Masud, M. K. et al. (2006). *Dispensing justice in Islam: Qadis and their judgments*. Netherland: Brill.
5. Besworth, C. E. ef el. (1991). *Encyclopedia of Islam (V.6)*. London: B J Brill.
6. Al-sarini, Muhammad Ibnu Ahmad. (1958). *Mukhni al-Muhtaj (முக்னி அல்-முஹ்தாஜ்) (பா. 04)*. Egypt: Multasamud Dabaf Wanashr.
7. Jazeel, M. I. M., & Fowzul, M. B. (2018). Qualifications of Quazi in Sri Lanka: A field study from Islamic perspective. *Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 1*(1), 32-51.
8. Ibn Qudamah. (1984). *Al-mukhni B Al-Bikh Al-Hanbali (அல்-முக்னீ பி அல்-பிக்ஹ் அல்-ஹன்பலி)*. Bayreuth: Darul Bigar.
9. Weeramantry, C. G. (2009). *Islamic jurisprudence, an international perspective (இஸ்லாமிய சட்டவியல், ஒரு சர்வதேசப் பார்வை)*. Chennai: Alternate Copies.
10. Ahmad, Puwad Abdul Muttim. (1996). *Ibn Khaldum Wa Risalatuh Ahl Kuzhat (இப்னு கல்தூம் வ ரிஸாலத்துஹ லில் குழாத்)*. Riyadh: Thar Al-Watan.
11. Amin, A.S.G. (2001). *Quazi Court practices and proceedings (காஸி நீதிமன்ற நடைமுறைகளும், செயற்பாடுகளும்)*. Colombo: Al-Ameen Law Center.

12. Salim Marsoof. (2001). *The Quazi Court system in Sri Lanka and its impact on muslim women. (இலங்கையின் காதி நீதிமன்ற முறைமையும் முஸ்லிம் பெண்கள் மீதான அதன் தாக்கமும்)*. Colombo: Muslim Women Research Initiative.
13. Sulani Kotikkara. (2010). *Muslim Family Law of Sri Lanka (இலங்கையின் முஸ்லிம் குடும்பச் சட்டம்)*. Colombo: Muslim Women Research Initiative.
14. Siddique Moulavi. (2016). *Quazi Court and its proceedings (காழி நீதிமன்றமும் அதன் செயற்பாடுகளும்)*. Kuliyapittiya. Interview, 2019 August 9.